தொகுதி- ருச

பகுதி-உ

Vol. 56

No. 2

செந்தமிழ்

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

திருவள்ளுவர்
ஆண்டு 1991
சார்வரி—வைகாசி
MAY-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. நல்லவர் யாவரோ?
'கீரன் தந்தை' 33

2. சின்னும் இசினும்
மா. இளையபெருமாள். எம். எ., எம். லிட். 37

3. இளம்பூரணர் எழுத்துரை
ஆ. சிவலிங்கனார் மயிலம். 42

4. பிடித்த பத்து
அ. இளங்கோவன் 49

5. அடைக்கலப்பத்து 52

6. சிலம்பில் ஒரு பரல்
சுப. மணிமொழியன் B. A., (Hons) 54

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்தகலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர். தமிழ்விரிவுரையாளர். செந்தமிழ்க்கல்லூரி. மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருசு	திருவள்ளுவர் ஆண்டு 1991 சார்வரி–வைகாசி 1960 — May	பகுதி. உ
Vol. 56		No. 2

32-ஆம் பக்கத் தொடர்ச்சி

நல்லவர் யாவரோ?

"கிரன் தந்தை"

தலைவனுடன் செல்லுவதற்குத் தலைவியும் ஆயத்தமாகி விட்டாள். தலைவன் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். வழக்கம்போல், குறிப்பிட்ட வேளையில் தலைவன் வந்தான். தலைவியின் தாய் தந்தையர் தம் எண்ணத்தை விளக்கமாக எடுத்துரைத்து, 'உடனே அவளை அழைத்துச் செல்லாவிடில் தலைவி தன்னுயிர் தாங்காள்!' என்று அவனிடம் கூறினுள் தோழி. 'தலைவியின் உயிர்க்கு இறுதியாயின் தனக்கும் அதுவேதான்!' என்று கொண்ட தலைவன், அன்றே, அக்கணமே தமர் அறியா வண்ணம் தலைவியை அழைத்துத் தன் ஊருக்குப் புறப்பட்டுவிட்டான்!

பொழுது புலர்ந்தது; தலைவியை தம் இல்லத்திற் காணுது தவித்தனர் பெற்றோர். ஊரின் பல விடங்களிலும் தேடினர். காண வியலாது கவன்றனர். தலைவியின் உயிர்த்தோழியை உசாவினர். அவள், தலைவனுடன் சென்ற செயலைக் குறிப்பாக உணர்த்தினுள்.

அவர்களை எவ்வாற்றானும் கண்டுபிடித்து விடவேண்டு மென்று பெற்றோர் விரும்பினர். அவ்வாறு கண்டுபிடிப்பது, அவ்விருவருக்கு மிடையேயுள்ள நட்பைக் குலைப்பதற்கன்று; இருவருக்கும் மணம் முடித்துவைக்கத்தான்!. அதன் விளைவாகச் செவிலித்தாய் புறப்பட்டாள். அவர்கள் சென்ற வழியிலேயே இவளும் சென்றாள். நெடுந்தொலைவு நடந்தாள். வழியில் ஒரு பாலை நிலம் குறுக்கிட்டது. வெப்பம் தாங்க முடியாத அளவிற்குக் கொடுமையை உடையது அப் பாலை நிலம். ஆங்காங்கே வழிப்பறிக் கள்வரின் தொல்லையும் உண்டு. "இத்தகைய நிலத்திலா என் மகள் சென்றாள்? தன் காதலனிடம் வைத்திருக்கும் அன்பானது, கொடிய பாலைநிலத்தின் துன்பத்தையுங்கூட மறக்கடிக்கச் செய்கின்றது! அன்பின் திறந்தான் என்னே" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள், வழியில் எவரேனும் எதிர்ப்படுவராயின் தன் மகளைப் பற்றி வினவலாம் என்று எண்ணியவளாய் நடந்து சென்றாள். அவ்வாறே அப்பாலை நிலத்து வழியினிடையே சிலரைக் கண்டாள்.

"அன்புடையீரே! நுமக்கு எதிரே ஆடவன் ஒருவனையும், அவனுக்குரிய மங்கை நல்லாளையும் கண்டீர்களே! கண்டீர்களாயின் எனக்குச் சொல்லமாட்டீர்களா?" என்று இரக்கந் தோன்றக் கேட்டாள் செவிலி.

தாம் கண்ணாரக் கண்ட அவ்விருவரைப் பற்றியும் விளக்கமாக அவர்கள் சொன்னார்கள் —

"தாயே! இப்பொழுது நாங்கள் நடந்துவரும் இப் பாலை நிலம் மிக மிகக் கொடியது. மூங்கில்கள் செறிந்து விளங்கக் கூடிய இடம் இது! இந்த நிலத்தில் எத்தகைய அரவத்தையும் கேட்க முடியாது. ஆயினும் ஒரே ஓர் ஒலியை மட்டும் கேட்கலாம். அதுவும் வாகை மரத்தின் ஒலி தான்! ஆங்காங்கே வாகை மரங்கள் உண்டு; அவற்றின்

நெற்றுக்கள் பசுமையற முதிர்ந்தவையாதலின் வெள்ளை வெளேரென்று காட்சியளிக்கும், மேல்காற்றுத் தாக்கி வீசுகின்ற பொழுது, அதனால் நிலைகலங்கிய அந்த நெற்றுக்கள் ஒலி செய்யும். அவ்வொலியைக் கேட்கின்ற பொழுது ஒன்று நினைவுக்கு வருகின்றது.

வடநாட்டிலிருந்து ஆரியர் சிலர் கூத்தாடுதற்கு இங்கு வந்தனர். கூத்தாடுந் தொழிலில் அவர்கள் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்கள் ஆடும் கூத்திற்கு 'ஆரியக் கூத்து' என்று பெயர். கூத்தாடி அதனால் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள். அவ்வாறு கூத்தாடுங்கால், கழையை நட்டுக் கயிறு கட்டி, அக்கயிற்றின்மேல் ஆடுவர். அந்த ஆட்டத்திற்கு ஏற்றாற்போல் பறை கொட்டப்படும். ஆயினும் அப்பறையொலியில் தம் கருத்தைச் செலுத்திவிடமாட்டார்கள். தாம் ஏறி நிற்கும் கயிற்றின் மேல்தான் கண்ணுங் கருத்துமா யிருப்பார்கள், அவ்வாறில்லையேல், அவர்கள் தம் இன்னுயிரை இழத்தல் நேரிடும்! இதுபற்றியேதான், **'ஆரியக்கூத்தாடினால் கயிற்றிலேகண்'**[1] என்ற பழமொழியும் எழுந்ததுபோலும்!

வாகையின் நெற்றுக்கள் ஒலிக்கும்போதெல்லாம், இவ்வாரியக் கூத்துக்குக் கொட்டப்படும் பறையொலிதான் நினைவுக்கு வருகின்றது. இத்தகைய நெற்றுக்கள் ஒலித்தற்கு இடமாகிய இப்பாலை நிலத்தில் கடந்து சென்றவர்கள் பலரைக் கண்டோம். அவர்களில் தாங்கள் கூறும் அடையாளங்களைக் கொண்ட இருவரையும் கண்டோம்.

---

1 "'ஆரியக் கூத்தாடினால் கயிற்றிலே கண்'' என்ற பழமொழியே 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்' என்று மருவியிருத்தல் வேண்டும்.

அந்த ஆடவன் அழகுடையவனாய்த் திகழ்ந்தான்; காலிலே கழல்களை அணிந்திருந்தான். அவனது ஒப்பற்ற வீரத்தை நிலைநாட்ட அக்கழல்களே போதும்போலும்: அன்றியும் கையில் வில்லொன்றையும் வைத்திருந்தான். தலைவியைத் தனித்து அழைத்துச் செல்வதால் ஏற்படும் தீங்கை நீக்குதற்பொருட்டு அவ்வில்லைக் கையிலேந்தியுள்ளான் என நினைக்கிறோம். அல்லது, பாலை நிலத்து ஆறலை கள்வர்தம் வழிப்பறிக் கொள்ளையைத் தடுப்பதற்காகவும் இருக்கலாம்!

அவ்வாடவனுக்கு அயலே செல்லும் மங்கைநல்லாளையும் கண்டோம். அவனுக்கேற்ற பொற்புடையவளாகக் காணப்பட்டாள் அவள்; தோள்வளையை அணிந்திருந்தாள். அவளது அடிகள் மென்மைத் தன்மை பொருந்தியனவாகக் காணப்பட்டன. இதற்குமுன் இவ்வாறு இடைச்சுரத்தில் நடந்து பழக்கம் இல்லாதவள் என்று துணிந்து கூறலாம்.

மணம் புரிதற்குமுன், மணமகளது காலில் பெற்றோரால் அணியப்பெற்ற சிலம்பை நீக்குதற்கெனச் 'சிலம்புகழி நோன்பு' என்றதொரு விழாக் கொண்டாடப்படும் அல்லவா? அவ்விழா இதுகாறும் கொண்டாடப்படவில்லை என்பதை அவளது மெல்லிய அடிகளில் பொருந்தியுள்ள சிலம்புகள் எமக்குக் காட்டின. அச்சிலம்புகளைக் கொண்டு இவ்விருவரும் மணமாகாதவர்கள் என மனத்துட்கொண்டோம்!

இத்தகைய கடுமையான பாலை நிலத்தில் செல்பவராயினும், அவர்களிடத்தே காணப்படும் அன்பும், உவகையும் ஊக்கமும், தெளிவும் எம்மனோரைப் பெரிதும் கவர்ந்து விட்டன. அந்த நல்லவர் யாவரோ அறியோம்! ஆயினும் அவர்கள் பெரிதும் இரக்கப்படத் தக்கவர்களே யாவர்!" இவ்வாறு இடைச்சுரத்தின் கண்ணே தலைவன் தலைவியைக்

கண்ணுற்ருேர் கூறினர். இக்கூற்றிலேதான் எத்துணை நயம்? எத்துணை உயரிய கருத்து? இவ்வுயரிய கருத்தைக் கவிதை வடிவாக நமக்குத் தந்தவர் பெரும்பதுமனுராவர்! அதனைக் காண்போம்; களிப்புக் கூர்வோம்!

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே ஆரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே"

குறுந்தொகை : 7

[காலன–காலில் உள்ளன; கழல்-காலில் அணியும் ஒரு வகை அணி; தொடி-வளையல்; கால்-காற்று; பொர-தாக்க; வேய்-மூங்கில்; அழுவம்-பாலைநிலம்; முன்னியோர்–கடந்து செல்ல நினைந்து வருவோர்]

சின்னும் இசினும்

மா. இளையபெருமாள், எம். ஏ., எம். லிட்.

வந்திசின். சென்றிசின் போன்றவைகளைக் கேட்கும் போது இவை என்ன சீன மொழிச் சொற்களா என்று கேட்கத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு ஒரு மொழியின் வளர்ச்சியிலே காலந்தோறும் மாற்றம் ஏற்படுவது இயற்கை.

இத்தகைய சொற்களின் அமைப்பைக் காண்பதற்கு உதவியாகத் தொல்காப்பியர் ஒரு சூத்திரம் இயற்றியிருக் கிறர்.

"மியா இக மோ மதி இகும் சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்"

என்பது அது. முன்னிலைச் சொல்லை உச்சரிப்பதற்குத் துணையாகத் தமக்கெனத் தனிப் பொருளின்றி வரும் அசை நிலைகளில் சின் என்பதும் ஒன்று என்பது இதன் கருத்து. இக் கருத்தின் துணை கொண்டு

உரைத்திசின் நெஞ்சே	—	குறுந்தொகை 63
கேட்டிசின் வாழி	—	மதுரைக்காஞ்சி 208
நடத்திசின் சிறிதே	—	புறநானூறு 255
என்றிசின் இகுளை	—	அகநானூறு 375

ஆகியவற்றில் காணப்படும் முன்னிலைச்சொற்களை முறையே உரைத்தி + சின், கேட்டி + சின், நடத்தி + சின், என்றி + சின் எனப் பிரித்து அமைப்பதற்குக் கீழ் வரும் சான்றுகள் ஆதாரமாக அமைகின்றன.

நீ உரைத்தி	—	பரிபாடல் 11
கூடிபோய்...கேட்டி	—	பரிபாடல் 19
பெரும....நடத்தி	—	புறநானூறு 22
என்றி தோழி	—	அகநானூறு 97

இவ்வாறே ஆன்றி + சின் (நற்றிணை 128), பூண்டி + சின் (அகநானூறு 7) வடித்தி + சின் (புறநானூறு 375) ஆகிய முன்னிலை வினைகளும் காணப்படுகின்றன.

ஆனால் இவ்வகை முன்னிலைச் சொற்களில் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. கண்டிசின் (ஐங்குறுநூறு 105) தெரிந்திசின் (அகநானூறு 281), நுவன்றிசின் (நற்றிணை 200), நோற்றிசின் (புறநானூறு 180) வந்திசின் (நற்றிணை 332) ஆகியசொற்களை முறையே காண்டி + சின், தெரிதி + சின், நுவறி + சின், நோறி + சின், வருதி + சின் எனப் பிரித்து, மாற்றங்களைப் புணர்ச்சிவிகாரம் எனக் கொள்ளவேண்டும்.

இத்தகைய சொற்கள் முன்னிலையோடு அமையாது தன்மை, படர்க்கை ஆகிய இடங்களையும் உணர்த்துவதைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம், சான்றாக

என்றிசின் யானே	—	நற்றிணை 61
யானே...ஆய்ந்திசினால்	—	குறுந்தொகை 262
தெளிந்திசின் யானே	—	ஐங்குறுநூறு 466
வலித்திசின் யானே	—	அகநானூறு 303

ஆகிய தன்மை வினைகளையும்

என்றிசினே புனல்	—	ஐங்குறுநூறு 73
போன்றிசினே கதுப்பு	—	,, 74
சென்றிசின்...நாளே	—	நற்றிணை 394
வேந்தனும்மே...பெற்றிசின்	—	புறநானூறு 11
பாடினியும்மே...பெற்றிசின்	—	... 11
மகனும்மே....பெற்றிசின்	—	... 11

ஆகிய படர்க்கை வினைகளையும் காண்கிறோம். தன்மை படர்க்கை ஆகிய இடங்களை உணர்த்தும் இவ்வகை வினைகளை எண்ணித் தொல்காப்பியர்,

"இசுமும் சின்னும் ஏனையிடத்த"

என்ற சூத்திரம் வகுக்கிறார். தன்மை படர்க்கை வினைகளில் அசைச்சொல் சின் என்ற இச்சூத்திரத்தின் கருத்து சிந்தித்தற்குரியது:

இச்சூத்திரத்திற்கு உரை எழுதுகின்ற இளம்பூரணர், தெய்வச்சிலையார், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய நான்கு உரையாசிரியர்களும் தொல்காப்பியர் கருத்தை ஆதரித்து உதாரணம் காட்டுகின்றனர். முன்னிலைக்கு என்றிசின் என்ற நற்றிணைச் (161) சான்றையும், படர்க்கைக்கு அறிந்திசினோரே என்ற குறுந்தொகைச் (18) சான்றையும் காட்டுகின்றனர். தெய்வச்சிலையார் பெற்றிசின் என்ற புறநானூற்றுச் (11) சொல்லையும் உதாரணமாகக் காட்டுகின்றார்.

என்றிசின், பெற்றிசின் என்ற சொற்களில் சின் அசை நிலை என்று கொண்டால் என்றி பெற்றி என்பவை தன்மை, படர்க்கை வினைகளா? அவ்வாறு வந்துள்ள சான்றுகள் உளவா? இல்லையாயின் இச்சொற்களிலுள்ள இகரம் எதனைக் குறிக்கின்றது? அறிந்திசினோர் என்பதிலும் சின் அசைநிலையாயின் இகரம் எவ்வாறு வந்தது? என்பவை பற்றி உரையாசிரியர்கள் இங்கு யாதும் குறிப்பிடவில்லை. இலங்கைத் தமிழறிஞர் டாக்டர் சதாசிவம் அவர்கள் தமிழ்க் கல்ச்சரில் (தொகுதி 7, இதழ் 2, பக்கம் 140) வெளியாகியுள்ள தமது கட்டுரையில் கண்டு, பெற்று முதலிய உகரவீற்றுச் சொற்கள் சின் என்ற உரையசையோடு புணரும் போது உகரம் இகரமாகத் திரிகிறது என்று விளக்குகிறார். ஆனால் உகரம் சகரத்திற்கு முன் இகரமாகத் திரிதற்கு இலக்கண விதியையோ, சகரத்திற்கு முன் அவ்வாறு திரியும் வேறு சான்றுகளையோ காணமுடிவதில்லை.

பின் எவ்வாறு இச்சொற்களின் அமைப்பைக் காண்பது? புறநானூற்றின் பழைய உரையாசிரியர் எழுதும் இலக்கணக்குறிப்பு நமக்கு வழிகாட்டியாக உதவுகின்றது. அதன் இருபத்திரண்டாம் பாடலில் வந்துள்ள கண்டிசின் என்ற சொல்லை நோக்கி அவர் இசின் தன்மைக்கண் வந்தது என்று எழுதுகிறார். இசின் என்ற அசைநிலையை அவர் கொள்ளுவது மிகவும் பொருத்தமாகத் தோன்றுகிறது. இக்கருத்தை ஆதரிக்க வேறுபல சான்றுகளும் உள்ளன.

இசின் என்ற இடைச்சொல்லை நச்சினார்க்கினியரும் பேசுவதைக் காண்கிறோம். தொல்காப்பியத்தின் இடையியல் புறனடைச் சூத்திரத்தில் இசினும் அசைநிலையாய் வந்தது என்று எழுதுகிறார்.

தன்மையிலும் படர்க்கையிலும் வரும் இவ்வகைச் சொற்களின் அமைப்பிலே வினைத்தாதுவும் கால இடைநிலைகளும் மட்டுமே உள்ளனவாகக் கொண்டு அவற்றை உச்

சரிப்பதற்குத் துணையாக இசின் என்ற இடைச்சொல்லைக் கொள்ளுதற்கு இன்னும் சில காரணங்கள் காணப்படுகின்றன.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் காட்டும் அறிந்திசினோரே என்ற படர்க்கைச்சொல் உண்மையில் அறிந்தோர் என்ற வடிவைக் கொண்டதே. எனவே இங்கும் இசின் சாரியையாய் வருகின்றது என்பதை உணர்கிறோம். சங்க இலக்கியங்களில் காணப்படும் இவ்வகைச் சொற்களில் சில வருமாறு.

கண்டிசினோர்	— ஐங்குறுநூறு 85
சென்றிசினோர்	— நற்றிணை 314
பெற்றிசினோர்	— புறநானூறு 125
அறிந்திசினோர்	— குறுந்தொகை 18
புகழ்ந்திசினேன்	— அகநானூறு 210
பிரிந்திசினேள்	— குறுந்தொகை 336
மறந்திசினோர்	— நற்றிணை 118
உயர்ந்திசினோர்	— புறநானூறு 214
ஆண்டிசினோர்	— 357
உடற்றிசினோர்	— பதிற்றுப்பத்து 72

இவற்றிலெல்லாம் வினைத்தாதுவைத் தொடரும் கால இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் இசின் சாரியையாய் வருதலைக் காண்கிறோம். இவ்வாறே வளர்ந்திசினுங்கு ஐங்குறுநூறு 44, மிளிர்ந்திசினுங்கு புறநானூறு 139 என்பவைகளில் வினைத்தாதுவைத் தொடரும் கால இடைநிலைக்கும் ஆங்கு என்னும் உவமைச் சொல்லிற்கும் இடையில் இசின் சாரியையாய் அமைகின்றது.

இன்னும் மற்றிசின் அன்றிசின் என்ற புறநானூற்றுச் சொற்கள் மற்று+இசின், அன்று+இசின் என அமைவ

தால் இசின் சொல்லிறுதியில் அசைநிலையாய் வருதலைக் காண்கிறோம்.

ஆகவே முன்னிலை வினைகளில் சின் அசைநிலை என்பதும், தன்மை படர்க்கை வினைகளில் இசின் அசைநிலை என்பதும் விளங்குகின்றன. எனவே என்றிசின் முதலிய சொற்கள் முன்னிலைக்கு வரும்போது சின்னீற்றுச் சொல் என்றும் ஏனைய இடங்களில் வரும்போது இசினீற்றுச் சொல் என்றும் உணருவது பொருத்தம் உடையதாகும்.

இளம்பூரணர் எழுத்துரை

(ஆ. சிவலிங்கனார், மயிலம்.)

3. ஐயும் மெய்யும் கெட்ட விறுதி?

அவை, அவ் என்ற இரண்டு சொற்களும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப் பெயர்கள். (மற்றைச் சுட்டுப் பெயர்கள் இவை, இவ், உவை, உவ் என்பன) இவைகள் வேற்றுமையுருபேற்கும் போது வற்று என்ற சாரியை பெற்று முடியும். தொல்காப்பியர்,

> சுட்டுமுத லாகிய ஐயென் இறுதி
> வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே (எழுத். 178)

என்ற நூற்பாவின் அவை *என்பது வற்றுச்சாரியை பெறும் என்றுரைத்தார். இதனால் அவை + ஐ என்ற இரண்டின் இடையில் வற்றுவர அவை + வற்று + ஐ என ஆகும். அடுத்து வற்று என்ற சாரியை பற்றித் தொல்காப்பியர்,

---

* இவ்விடத்தும் பிறவிடங்களிலும் அவை என ஒன்றே கூறப்பட்டிருப்பினும் பிற சுட்டுப் பெயர்களையும் கொள்க.

வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே (எழுத். 123)

என்ருர். இதனுல் வற்று என்ற சொல்லின் முதலில் நின்ற வகர மெய்கெடும் என்பது பெற்ரும். எனவே அவை + வற்று + ஐ என்னும் சொற்கள் அவை + அற்று + ஐ என நின்று அவையற்றை என்ருகும்.

இனி அவ் என்னும் பெயரும் உருபு ஏற்கும் போது வற்றுச் சாரியைபெறும் என்பதை ஆசிரியர்,

சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்
கெட்ட விறுதி யியல்திரி பின்றே (எழுத். 184)

என்ற நூற்பாவால் குறித்தார். சுட்டுமுதல் வகரமாகிய அவ் முதலியன வற்றுச் சாரியை பெறும் என்பதே இந்நூற் பாவின் பொருள். இதில் ஒரு மாட்டேறு கூறப்பட்டுள்ளது. ஐயும் மெய்யும் கெட்ட விறுதியின் இயல்பாகிய வற்றுப் பெறுதலில் சுட்டு முதல் வகரம் மாறுபடுதல் இல்லை என்ப தால் சுட்டு முதல் வகரத்தை ஐயும் மெய்யும் கெட்ட விறு தியின் இயல்புடன் மாட்டேற்றுகிருர் ஆசிரியர் என அறிய லாம். அவ்விறுதி யாது என்பதில் உரையாசிரியர் இருவ ரும் மாறுபடுகின்றனர். இளம்பூரணர் இந்நூற்பாவுக்கு.

சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகர வீற்றுச்சொல்
ஐகாரமும் அதனுற் பற்றப்பட்ட மெய்யும் கெட்டு
வற்றுப் பெற்று முடிந்த சுட்டுமுதல் ஐகார வீற்றியல்பில்
திரிபின்றி வற்றுப் பெற்று முடியும்"

என உரை யெழுதினுர். இவர் உரைப்படி ஐயும் மெய்யும் கெட்ட விறுதியின் இயல்பாவது அவை முதலியவை ஐமுத லிய உருபுகளுடன் சேரும்போது இறுதி ஐயும் வகரமும் கெட்டு அ முதலியவாக நின்று வற்றுச் சாரியை பெற்று அவற்றை முதலியவாக முடிதலாம். அந்த இயல்பில் திரி யாது அவ் என்பதும் வற்றுப்பெற்று முடியும். அவ் + வற்று + ஐ என்னும் சொற்கள் சேரும்போது. அவ் என்பு

தன் இறுதி வகரம் "அத்தே வற்றே ஆயிருமொழிமேல், ஒற்றுமெய் கெடுதல்" என்னும் விதிப்படிக் கெட்டு அவற்றை என வரும்.

இளம்பூரணர் கொள்கைப்படிப் பார்க்கப்போனால் சுட்டு முதல் ஐகார வீற்றனது ஐயும் மெய்யும் கெடும் என்று ஆசிரியர் தொல்காப்பியர் யாண்டேனும் விதித்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. முன் விதிக்கப்பட்ட விதியுடன்தான் பின்னர் மாட்டேற்றுக் கூறலாம். விதிக்காத ஒன்றுடன் மாட்டேற்றல் இல்லை. தொல்காப்பியர், சுட்டு முதல் ஐகாரம் ஐயும் மெய்யும் கெடும் என யாண்டும் விதிக்கவில்லை, இளம்பூரணர் எழுதிய உரை பொருந்துமா என்பது ஆய்வுக்குரியதாம்.

நச்சினார்க்கினியர் ஐயும் மெய்யும் கெட்ட விறுதியாவது 'யாவை' என்ற சொல் என்பர். இவர் கூற்றுப் பொருத்தமாகவே உள்ளது. யாவை என்ற சொல் வற்றுப்பெற்று முடியும் என்று கூறவந்த ஆசிரியர்,

> யாவென் வினாவின் ஐயென் இறுதியும்
> ஆயியல் தெரியா தென்மனார் புலவர்
> ஆவயின் வகாரம் ஐயொடும் கெடுமே. (எழுத். 179)

என்றார். யாவை என்பது வற்றுப்பெறும் என்பதும் அப்போது இறுதி ஐயும் வகரமெய்யும் கெடும் என்பதும் இதில் குறிக்கப்பட்டன. எனவே யாவை + வற்று + ஐ என்பன யா + வற்று + ஐ என்றாகிப் பின் யாவற்றை என்றாகும் என்பது பெறலாம். இந்நூற்பாவில் குறிக்கப்பட்ட யாவை என்பது ஐயும் மெய்யும் கெட்ட விறுதியாக இருத்தலின் இந்த யாவை என்பதையே ஐயும் மெய்யும் கெட்ட விறுதி என மாட்டேற்றியதாக நச்சினார்க்கினியர் கூறினர். இது பொருத்தமே. என்றாலும் சுட்டு முதலாகிய ஐயென் இறுதி ஐயும் மெய்யும் கெட்டு வற்றொடுவரும் என்பதற்குத் தொல்காப்பிய நூற்பா இல்லாமல் போகின்ற குறையை நீக்க முடியாது. சுட்டு முதலாகிய ஐயென் இறுதி அவ்வாறு வரும்

என்பதை நச்சினார்க்கினியரும் உடன்படுவர். "வஃகான் மெய்கெட" (123) என்ற நூற்பாவின் உரையில்,

> "இன்னும்.........அவை இவை உவையென நிறுத்திச்" "சுட்டு முதலாகிய ஐயென் இறுதி" என்றதனான் வற்றும் கொடுத்து வேண்டும் செய்கை செய்க"

என்றெழுதியமையால் அதனை உணரலாம்.

சுட்டுமுதல் வகரம் வற்றுப் பெறும் என்று கூறவந்த விடத்தில் யாவை என்ற வினைப் பெயருடன் மாட்டேற்று வதை விடச் சுட்டு முதலாகிய ஐயென் இறுதியுடன் மாட்டேற்றுவதே மிகச் சிறக்கும் என்னலாம். அவ்வாறெண்ணித்தான் இளம்பூரணர் உரையெழுதினர் போலும். அதனால்தான்,

> சுட்டு முதலாகிய ஐயென் இறுதி
> வற்றொடு சிவணி நிற்றலு முரித்தே (எழு. 178)

என்ற நூற்பாவுக்கு,

> "சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார வீற்றுச்சொல் வற்றுச் சாரியையோடு பொருந்தி அவ்வீற்று ஐகாரம் நிற்றலும் உரித்து; நில்லாமையும் உரித்தே"

என உரையெழுதினர். அன்றியும்,

> "ஐகாரம் கெட்டவழி நின்ற வகரத்தினை வற்றின்மிசை ஒற்றென்று கெடுத்து அவற்றை இவற்றை உவற்றை யென ஒட்டுக."

எனவும் எழுதினர். இந்நூற்பாவில் நிற்றலும் என்பதில் உள்ள உம்மையையும், தாம் உரைக்கீழ் எழுதியதையும் மனதிற் கொண்டே "ஐயும் மெய்யும் கெட்ட விறுதி" என்பதற்கு யாவையென்பதைக்கொள்ளாமல் (அவை முதலிய) சுட்டு முதலாகிய ஐயென் இறுதியையே கொண்டார். என்வே நச்சினார்க்கினியர் கூற்றை விட இளம்பூரணர் கூற்று ஒருவகையில் சிறக்கும் என்றே கொள்ளலாம்.

மாட்டேறு என்பது முற்றிலும் பொருந்துவதாக இருத்தல் வேண்டும் என்பதில்லை; ஒருபுடைச் சேறலாகவும் இருக்கலாம் என்பது உரையாசிரியர் இருவரும் கொண்ட கொள்கை. உதாரணமாக ஒன்று காணலாம். மொழிக்கு ஈறுய மெய்யெல்லாம் புள்ளிபெற்று நிற்கும் என்று கூற வந்த ஆசிரியர் தொல்காப்பியர், ''மெய்யீறெல்லாம் புள்ளி யொடு நிலையல்'' (எழு. 104) என்றார். அதையடுத்துக் ''குற்றிய லுகரமும் அற்றென மொழிப'' என்ற நூற்பாவை அமைத்தார். மாட்டேற்று முறைப்படிப் பின்னதற்கு ''ஈற்றுக் குற்றியலுகரம் மொழியிறுதி மெய்கள் போலப் புள்ளி பெற்று நிற்கும்'' என்றே உரை கூறவேண்டும். அவ்வாறு கூருமல் ''ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளி யீறு போல உயிர் ஏற இடங்கொடுக்கும் என்று கூறுவர் புலவர்'' என உரையெழுதினர் இருவரும். 'இம்மாட்டேறு ஒரு புடைச் சேறல், புள்ளிபெருமையின்'' என நச்சினுர்க்கினியரும். ''இம்மாட்டேறு ஒருபுடைச்சேறல்'' என இளம்பூரணரும் எழுதினர். எனவே ஆசிரியர் தொல்காப்பியர் மாட்டேற்று நூற்பாக்களை ஒருபுடைச் சேறல் நிலையிலும் அமைப்பர் என இருவரும் கருதினர் என்னலாம். அந்நிலையிலேயே சுட்டு முதல் வகரம் வற்றுப் பெறும் எனக்கூற வந்த ஆசிரியர் ''சுட்டுமுதலாகிய ஐயென் இறுதி'' என்ற நூற்பாவுடன் மாட்டேற்ற வேண்டி ''ஐயும் மெய்யும் கெட்டவிறுதியியல் திரிபின்றே'' என்ருர் என்னலாம்.

இதுவரையிலும் கூறியவற்றிலிருந்து ''ஐயும் மெய்யும் கெட்ட விறுதி'' யென்று தொல்காப்பியரால் கூறப்பட்டது சுட்டு முதலாகிய ஐயென் இறுதியேயென இளம்பூரணர் கொண்டதும் பொருந்தும் என்பதும், நச்சினுர்க் கினியர் 'யாவை' யென்ற வினுப்பெயர் என்றதும் பொருந்துமேனும் சுட்டு முதல் வகரத்தைச் சுட்டு முதல் ஐகார வீற்ருேடு மாட்டேற்றுவதே சிறக்கும் என்பதும் விளங்கும். இக் கட்டுரை, ஆராய்ச்சியாளருக்கு எவ்வாறிருப்பினும் இளம்பூரணர் உரைக்கு ஒரு விளக்கமாக அமைக என்பதற்காகவே எழுதப்பட்டது,

4. உடம்படு மெய்

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் (141)

இந்நூற்பா உயிர்ஈறு உயிர்முதல்மொழியோடு புணரும் வழி உடம்படுமெய் பெறும் என்பது கூறுதல் நுதலிற்று.

"ஒருமொழி இருமொழி தொடர்மொழியாகிய மூவகைப்பட்ட
மொழிக்கும் உயிர்முதல்மொழிவருமிடத்து இடை
உடம்படுமெய் வடிவுகோடலை நீக்கார்"

என்பது இதன் பொருள். இந்நூற்பாவில் உடம்படுமெய் யாக வரும் எழுத்துக்கள் யாவை யென்பது கூறப்படவில்லை. அதனால் இளம்பூரணர்,

"உரையிற்கோடல் என்பதனால் உடம்படு மெய்யாவன
யகாரமும் வகாரமும் எனக்கொள்க. இகாரவீறும்
ஈகாரவீறும் ஐகாரவீறும் யகர உடம்படுமெய் கொள்வன.
அல்லனவெல்லாம் வகரமெய் கொள்வன"

என எழுதினர். இவ்வாறு எழுதியவர்,

"ஒன்றென முடித்தல் என்பதனான் விகாரப்பட்ட
மொழிக்கண்ணும் உடம்படுமெய் கொள்க.
மரவடி ஆயிருதிணை எனவரும்"

என்றும் எழுதினர், ஆகார வீறு வகர உடம்படு மெய் பெறும் என்றவர் விகாரப்பட்ட உயிர்பற்றிக் கூறும்போது யகர உடம்படு மெய்பெற்ற ஆயிருதிணை யென்பதை உதாரணம் காட்டினர். இது பொருந்துமா என்பது ஐயம். இவர் இங்கெழுதியுள்ள நிலையில் தவறுதான். ஆனால் இது தவருக எழுதப்படவில்லை யென்பதைப் பிறிதோர் இடங் கொண்டுதான் நிறுவ முடியும்.

"உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது" (208)

என்னும் நூற்பா அகரச் சுட்டின் முன்னர் உயிர்வரின் எவ்வாறு முடியும் என்பதை யுணர்த்த வந்தது. "உயிர் முதல் மொழி அகரச் சுட்டின் முன்னர்வரினும் முன்நூற்

பாவில் கூறிய வகரம் (207) மிக்கு முடியும். அவ்வியல்பில் திரியாது'' என்பது இதன் பொருள், 'அவ்வாடை' என்பது உதாரணம்.[1] இந்நூற்பா வுரையின்கீழ் இளம்பூரணர்,

"திரியாது என்றதனனே மேல் (209) சுட்டு நீண்ட
வழி யகரத்தோடு கொள்க"

என்றும் எழுதியுள்ளார். அ + இருதிணை = அவ்விருதிணை யென வரும். 'அ' என்ற சுட்டு நீண்டு 'ஆ' என்றுயவழி ஆயிருதிணை யென யகரமெய்யொடு வரும்.

இதனல் ஆகாரத்தின் முன் உயிர்முதல் மொழிவரின், வகர உடம்படுமெய் பெறும் என்றுலும் சுட்டு நீண்டு ஆ என நிற்குமாயின் யகர உடம்படுமெய் பெறும் என்பது இளம்பூரணர் கருத்து என்பதை யறியலாம். தொல்காப்பியரும் அக்கருத்துப்படவே நூற்பாக்களில் அமைத்துள்ளார்.

"ஆவின் இறுதி" (ஆ + இன். வ்) (121)
"ஆவும் மாவும்" (ஆ + உம், மா + உம். வ்). (232)
"எல்லா வெழுத்தும்" (எல்லா + எழுத்தும். வ்) (47)

என ஆகார வீறு உயிர் முதல் வருமொழி வந்தவிடத்து வகர உடம்படுமெய் பெற்ற நிலையிலும்,

"ஆயீரியல" (அ + ஈர். ய்) (108)
"ஆயியல் திரியாது" (அ + இயல். ய்.) (208)
"ஆயிருதிணை" (அ + இருதிணை. ய்) (சொல். கிளவி 1)

என அகரச்சுட்டின் நீட்சியாகிய ஆகாரவீறு யகர உடம்படு மெய் பெற்ற நிலையிலும் தொல்காப்பியர் கூறியதைக் காணலாம். ஆதலால் இளம்பூரணர் "விகாரப்பட்ட மொழிக்கண்ணும் உடம்படுமெய் கொள்க" என்று கூறி ஆயிருதிணை யென உதாரணம் காட்டியது தவறன்று எண்ணலாம்,

---

1. சுட்டு உயிர்முன்வரின் வகர உடம்படு மெய்பெறும் என்பது "எல்லாமொழிக்கும்" (141) என்ற பொதுச் சூத்திரத்தாலேயே பெறுதலின் "உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது" என்பது வேண்டுவதில்லை யென்னலாம். இதற்குமுன் சுட்டின்முன் ஞநமயவவரின் எவ்வாறும் என்றும் வவ்வரின் எவ்வாறும் என்றும் கூறியமையால் உயிர்வரின் எவ்வாறும் என்பதும் கூறப்படவேண்டுதலின் ஆசிரியர் கூறினர் என்க.

பிடித்த பத்து

நல்லைக்கவி அ. இளங்கோவன்

1. பூவிலே முதலிற் பொருவறத் தோன்றிப்
புகழ்மிகு கலையெலாம் விளைத்துப்
பாவிலே முதன்மை படைத்தருள் செய்யும்
பான்மையிற் சிறந்துநான் வாழ்த்துந்
தேவிலே சிறந்து சிந்தையுள் நிறைந்த
செல்வமே செந்தமிழ்த் தாயே
ஏவிலே னுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

2. இயலிசை கூத்தெனும் இனியமுக் கூறாய்
இளமைமா றாமலென் நாளும்
நயமெலாங் கொண்டுள நங்கைநல் லாளாய்
நாற்கவி ராசர்கள் பாடச்
செயமெலாங் கொண்டென் சிந்தைகுடி கொண்ட
செல்வமே செந்தமிழ்த் தாயே
இயல்புடன் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

3. இச்சகங் கண்ட எழின்மொழிக் கெல்லாம்
இனியதாய் நீதா னாகி
முச்சபை கண்டு மூதறி புலவரும்
முடிபுனை மன்னரும் போற்றத்
தெச்சணத் திருந்து திசையெலா மாண்ட
செல்வமே செந்தமிழ்த் தாயே
இச்சையோ டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

4. கண்ணிலே ஒளிர்கரு மணியிலே யென்றும்
காண்புறக் குடியிருந் தென்றன்
எண்ணமே சிறக்க இதயமே மகிழ
எழிற்கவி நாளும்நீ தருதல்
திண்ணமே தீங்கவிக் கன்னியே யென்னுயிர்ச்
செல்வமே செந்தமிழ்த் தாயே
எண்ணியே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

5. ஒப்பிலா மணியே உயர்ந்தமா ணிக்கமே
ஒள்ளிய நீர்க்கடல் முத்தே
தப்பிலா மாற்றுடைத் தங்கமே பொன்னே
தளிர்விடுங் கற்பக தாருவே
செப்புதற் கரிய சீர்மிகும் இலக்கியச்
செல்வமே செந்தமிழ்த் தாயே
இப்பொழு துன்னையே சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

6. அன்னையே யாவிக் கமுதமே யமுதமூறும்
அருவியே யருவிவீழ் மலையே
மன்னுவான் நிலவே மாண்பகற் சுடரே
வையகத் தொருவி ளக்கே
தென்னகந் தொழுதிடும் தெய்வமே உய்வருள்
செல்வமே செந்தமிழ்த் தாயே
என்னகத் துன்னைநான் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

7. தேனென வினித்துத் தெவிட்டுறா திருக்கும்
தீஞ்சுவைச் செங்க ரும்பே
ஊனென உயிரென ஒன்றியென் னுடனே
ஒன்றித்து நின்றகா தலியே

சீனமும் யவனமும் சென்றுகொடி நாட்டிய
செல்வமே செந்தமிழ்த் தாயே
யானுனைச் சேர்த்துச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

8. மங்கையர் திலகமே மாதர்மா ணிக்கமே
மனமெலாம் நிறைந்துநற் காவியம்
பொங்கவே யூக்கிப் புலவரிற் புகழ்மிகு
புலவனென் றியான் விளங்கிடவே
செங்கவி தந்துசொற் செல்வங் குவித்திடும்
செல்வமே செந்தமிழ்த் தாயே
இங்குநான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

9. மண்ணினைப் பொன்னினை மாதரை விரும்பியே
மாண்பெலா மிழந்துநான் மாழ்வேன்
புண்ணிய மொன்றிலாப் புழுத்தலைப் புலையனேன்
புகழுடன் வாழவே வைத்தாய்
திண்ணிய விலக்கணத் திருவெழில் சிறந்திடும்
செல்வமே செந்தமிழ்த் தாயே
எண்ணிநா னுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

10. பட்டமும் உயர்ந்த பதவியும் வேண்டிப்
பண்பெலாம் விட்டுநான் தீநெறித்
திட்டமும் செய்து செயல்படும் போதில்
தேடிவந் தாண்டு கொண்டுன்
சிட்டனு னுகிடச் செய்துயச் செய்த
செல்வமே செந்தமிழ்த் தாயே
இட்டனு னுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

அடைக்கலப் பத்து

(1)

கண்ணேயென் கண்மணியே கண்மணியிற் பாப்பாவே
பெண்ணேயென் பேராசைப் பெட்டகமே நின்னுடைய
தண்ணாரும் அருட்கடலில் தமியேனை யாடவிடு
பண்ணாரப் பாடுகின்ற பத்தனுன்றன் அடைக்கலமே!

(2)

ஊனாகி உயிராகி உயிர்க்குயிரு மாகிவருந்
தேனாகித் தெவிட்டாத தெள்ளமுத வெள்ளமுமாய்
ஆனாத வருட்கடலும் ஆகிவருந் தமிழணங்கே
தானாக வந்தடைந்த தாசனுமுன் அடைக்கலமே!

(3)

சோறாகிச் சுகமாகிச் சுவைமிகுந்த மதுப்பாயும்
ஆறாகி யதுநிறையும் அருட்கடலு மாகிநின்று
வேறாகி நின்றேனை விழைந்திழுத்துக் குளிப்பாட்டிச்
சீராக வைத்தவளே சிறியேனுன் அடைக்கலமே!

(4)

எண்ணாத எண்ணங்கள் எண்ணியிடர்ப் பட்டேனைப்
புண்ணாக மனங்கெடுத்துப் புலம்பியழு திருந்தேனை
உண்ணாத பாலூட்டி உளந்தழையச் செய்தவளே
கண்ணாரக் கண்டுவந்த காதலனுன் அடைக்கலமே!

(5)

உள்ளமெனுங் கோவிலிலே ஒருகுடியா யுள்ளவளே
கள்ளமெலாம் போக்குவித்த காதலியே காவியமே

தள்ளியெனைத் தட்டாமல் தான்தழுவ வந்தவளே
அள்ளியணைத் திடுவென்னை அடியேனுன் அடைக்கலமே!

(6)

துன்பங்கள் நீக்கிமனத் துயரங்கள் போக்கிவிட்டே
இன்பங்கள் சேர்க்கவந்த இளங்குயிலே எழில்மயிலே
மன்புவியில் எனையாண்ட மங்கையரே மாதவியே
அன்புடனே எனைத்தழுவி ஆதரியுன் அடைக்கலமே!

(7)

மண்ணுலகில் பற்றெனக்கு மற்றெதுவு மில்லையம்மா
எண்ணுமுன்றன் பற்றல்லால் இனியதமிழ்த் தனியரசி
வண்ணமிடு பெண்ணணங்கே வான்மதியே தான்முகத்தாய்
திண்ணமுறச் சேர்த்தணைப்பாய் சேர்ந்தேனுன் அடைக்கலமே!

(8)

சங்கமுறு மேலோர்கள் தந்தநகை யணிந்தழகு
பொங்கவரு பூவையரே பொற்புமிகு பாவையரே
அங்கமெலாங் கூட்டியெனை யணைத்தன்பு செய்தவரே
இங்குமக்கே இனியன்யான் என்றுமும தடைக்கலமே!

(9)

இலக்கியமும் இலக்கணமும் இயலழகும் இசையழகும்
குலக்கொடியே உன்னுடைய கூத்தழகும் கண்டுவந்து
கலக்கமெலாம் போக்கிவிட்டுக் காதலினாற் கட்டுண்டேன்
விலக்காமல் அணைத்திடுநான் வேண்டுவதுன் அடைக்கலமே!

(10)

காதலுக்குக் கண்ணுண்டோ? கடையேனே யானெனினும்
மோதிவிட்டேன் உன்னுடலை முத்தமிழின் நாயகியே
ஏதுமில்லை குற்றமென்மேல் எடுத்தணைத்துக் கொள்ளடியே
சாதலின்றி யுனைத்தழுவுந் தமியேனுன் அடைக்கலமே

சிலம்பில் ஒரு பரல்

சுப. மணிமொழியன், *B. A. (Hons.)*

வாழ்ந்த மக்களின் வரலாற்றை எடுத்துக்காட்டி வாழும் மக்கட்கு வழிகாட்டியாக விளங்குகின்ற காப்பியங்களுள் நெஞ்சை அள்ளுவதா யுள்ளது சிலம்பு. நெஞ்சை அள்ளுகின்றமையால், தானும் நிலைத்து நின்று நீடுபுகழ் பெறுகின்றது, படிப்போரும் நெறிக்கண் நின்று நீடு புகழ் பெறச் செய்கின்றது. வாணிலே ஒரு குடிக்கு ஏற்பட்ட வாழ்வு தாழ்வுகளை வையத்தார் அறிந்து பயன்பெறத் தக்க வகையில், சோணுடு துணை செய்தமையால், அந்நாட்டுக்கும் நாட்டு வேந்தனுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் வாழ்த்துதலுடன் தொடங்குகின்றது சிலம்பு.

ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி மாசாத்துவான் மகன் கோவலனுக்கும், பெருங்குடி வாணிகன் பெருமட மகளாகிய கண்ண கிக்கும் திருமணம் நிகழ்கின்றது. கயமலர்க் கண்ணியும் காதற் கொழு நனும் முதிர்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும் கதிரொருங்கிருந்த காட்சி போல மனையறத்திருந்து விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கை நடத்தி உரிமைச் சுற்றமோடு ஒரு தனி புணர்ந்திருக்கின்ற னர். யாண்டு சில கழிந்தன. ஆடலும் பாடலும் அழகும் வாய்க்கப் பெற்று அரசன் முன் அரங்கேற்றம் நிகழ்த்தும் மாமலர் நெடுங்கண் மாதவியிடத்து மனங்கொண்டு, வடுநீங்கு சிறப்பில் தன் மனையகம் மறந்து விடுதலறியா விருப்பினன் ஆகின்றான் கோவலன். கலவியும் புலவியும் காதலற்கு அளித்தாங்கு ஆர்வநெஞ்சமொடு கோவலற்கு எதிரில் கோலங்கொண்டு மாதவி மகிழ்ந்திருக்கையில் கையறு நெஞ்சத் தோடு கண்ணகி இருக்கின்றாள். புகாரிலே நிகழும் இந்திர விழாவில் கலந்து ஊர் மக்கள் அனைவரும் உவகையோடிருக்கையில் உள்ளத்துய ரோடிருக்கின்றாள் கண்ணகி. மடலவிழ் கானல் கடல் விளையாட்டுக் காண்டல் விருப்பொடு மாதவியும் கோவலனும் இருக்கின்றனர். காவிரியை நோக்கி மாதவன் மனமகிழ கோவலன் யாழிசைக்கின்றான்.

''கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்! மங்கை மாதர் பெருங் கற்பென்று அறிந்தேன் வாழி காவேரி!'' என்னும் கோவலனுடைய கானல் வரிப்பாடல் கேட்கின்றாள் மாதவி மன்னுமோர் குறிப்புண்டு இவன் தன்னிலை மயங்கினனெப் புலவியால் யாழ் வாங்கித் தானுமோர் குறிப்பினள் போல் கானல்வரி பாடுகின்றாள் மாதவி. கானல்வரி யான் பாடத் தான் ஒன்றின் மேல் மனம் வைத்து மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள் என்று சொல்லி மாதவியை விட்டுக் கோவலன் பிரிகின்றான். கையற்ற நெஞ்சினளாய் வையத்தின் உள்புக்குக் காதலனுடனன்றியே மாதவி தன் மனைபுகுகின்றாள். பிரிந்த கோவலனுக்குத் தன் பிரிவுத் துயர் உணர்த்தும் மடல் விடுக்கின்றாள். ஆடல் மகளே ஆதலின் ஆயிழை பாடு பெற்றன அப் பைந்தொடி தனக்கென அணித்தோட்டுத் திருமுகத்து ஆயிழை எழுதிய மணித்தோட்டுத் திருமுகத்தைக் கோவலன் மறுக்கின்றான். மாலை வாராராயினும் காலை காண்குவம் எனக் கையறு நெஞ்சமொடு பூமலர் அமளிமிசைப் பொருந்தாது மாதவி கிடக்கின்றாள். நெஞ்சம் கடுக்கும் கனவு கண்டு நீள் துயருற்றுக் கண்ணகி இருக்கையில் கோவலன் வருகின்றான். பாடமை சேக்கையுள் புக்குத் தன் பைந்தொடியின் வாடிய மேனி வருத்தங்கண்டு, தான் மேற்கொண்ட பொருந்தாச் செயலுக்கு வருந்துகின்றான். நலங்கேழ் முறுவல் நகை முகங் காட்டிச் சிலம்புள கொண்ம் என்று கண்ணகி சொல்ல, சிலம்பு முதலாகச் சென்ற கலனொடு உலந்த பொருள் ஈட்டுதல் எண்ணி, மலர்ந்தசீர் மாடமதுரைக்கு இருவரும் செல்கின்றனர். நாட்டையும் காட்டையும் கடந்து செல்கின்றமையால் வருந்துநோய் தணியச் சிற்சில விடங்களில் இருந்து செல்கின்றனர். கடுங்கதிர் வேனில் கண்ணகி பொறாள் என்றும், பரல் வெங்கானத்து அவள் சீறடி படிந்தில என்றும் பகலொளி தன்னினும் பல்லுயிரோம்பும் நிலவொளி விளக்கின் நீளிடை மருங்கின் இரவிடைக் கழிதற்கு ஏதம் இல்லெனச் செல்கின்றனர். மதுரைப் புறஞ்சேரிக்கண் சென்று தங்குமிடத்தில் கோவலனைக் கோசிகன் கண்டு, அவன் பெற்றோர் உற்ற பெருந் துயரத்தையும், மாதவியுற்ற மனக் கலக்கத்தையும் சொல்லி மாதவியின் முடங்கலைக் கொடுக்கின்றான். தான் தீதிலள் எனத் தளர்ச்சி நீங்கி என் தீது என்று

எய்தியதுணர்கின்றான் கோவலன். எற்பயந்தோற்கு இம் மண்ணுடை முடங்கல் பொற்புடைத்தாகப் பொருளுரை பொருந்தியது எனச் சொல்லிக் கோசிகனிடம் கொடுத்துத் தன் தந்தையிடம் கொடுக்கச் சொல்கின்றான். தொடர்ந்து கண்ணகியுடன் செல்கையில், அவள் நறு மலர் மேனி நடுங்குதுயர் எய்தியமை கண்டு கலங்கி அறியாத் தேயத்தாரிடை உழந்து சிறுமையுற்றவனாக வருந்தும் கோவலனைக் கவுந்தியடிகள் தேற்றுகின்றார். கவுந்தியின் காப்பிலே கண்ணகியை இருத்திவிட்டுக் காவலனது மதுரைப் பேரூர் கண்டு மகிழ்வெய்திக் கோவலன் பெயர்கின்றான். மாதரி அங்கு வந்து கவுந்தியைத் தொழு கின்றாள். கவுந்தி மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாக அளித்து, ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத் தாயும் நீயே ஆகித்தாங்கு என்று சொல்கின்றார். மாதரி மனையிலே தங்கி உணவு உண்ட பின், தன்னொடு போந்து தன் துயர் களைந்த கற்பின் கொழுந்தாம் கண்ணகியின் நிலைக் காகக் கோவலன் வருந்திவிட்டு ஊர்க்குள் செல்கின்றான். பொய்வினைக் கொல்லன் செய் சூழ்ச்சியால், தேராமன்னனாகிக் கோவலனைக்கொன்று சிலம்பு கொணரப் பணிக்கின்றான். காவலன் செங்கோல் வளைய, கோவ லன் புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப மண்ணில் வீழ்கின்றான். மாதரி வீட்டில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றமையால், கண்ணகியை முன் வைத்து ஆயர் மகளிர் குரவைக் கூத்தாடுகின்றனர். குரவை முடிவில் ஓர் ஊரரவங் கேட்டு விரைந்து வரும் மாதரியின் வாயிலாகக் கோவலன் கொலையுண்ட செய்தியைக் கண்ணகி கேட்டுச் செங்கண் சிவப்ப அழுகின்றாள். அல்லலுற்று ஆற்றாது அழுதவள் கொலைக் களம் சென்று, புண்பொழி குருதியோடு பொடியாடிக் கிடக் கும் தன் கணவனைக் கண்டு கலங்குகின்றாள். அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்த தென்னவனிடம் சென்று வழக்குரைக்கின்றாள். தேமொழியாகிய கண்ணகி உரைத்த செவ்வை நன்மொழியைக் கேட்டும், அவள் அணிமணிக் காற்சிலம்பைக் கண் டும் கெடுக என் ஆயுளென மன்னன் மயங்கி வீழ்கின்றான்.

[தொடரும்]

மதுரைத் தமிழ்ச் சங்கத்
தனித் தமிழ்த் தேர்வுகள்—1960.

பின்வரும் மாணவர்கள் கீழ்க்கண்ட தேர்வுகளில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வகுப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

புலவர் நுழைவுத் தேர்வு

முதல் வகுப்பு

90	ம. மு. இராமகிருஷ்ணன்,	செந்தமிழ்க் கல்லூரி மதுரை.

இரண்டாவது வகுப்பு

91	T. சீனிவாசன்	செந்தமிழ்க் கல்லூரி மதுரை
92	R. இராமச்சந்திரன்	
95	S. தனலெட்சுமி	

மூன்றாவது வகுப்பு

4	ஜே. ஜோசுவா	மே/பா. வித்வான் ம. தாமஸ், வடக்குத் தெரு, நெய்யூர், குமரி மாவட்டம்.
3	என். லிஸி நவமணி	
16	எம். மேரி ஜாய்	
94	C. செல்வராசன்	மே/பா. செந்தமிழ்க் கல்லூரி, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.
96	லலிதா	
97	S. ஜெயலெட்சுமி	
98	சாந்தா தாயம்மாள்	

இளம் புலவர் தேர்வு

முதல் வகுப்பு

இல்லை

இரண்டாவது வகுப்பு

101	ஆ. சண்முகம்	செந்தமிழ்க் கல்லூரி மதுரை

மூன்றாவது வகுப்பு

14	சி. கனககபை	மே/பா. வித்வான், ம. தாமஸ் வடக்குத் தெரு நெய்யூர் குமரி மாவட்டம்
15	வை. தங்கமணி	
21	சூ சேசுஜயா	
36	இரா. செல்லப்பன்	
37	S. தங்கராஜ்	
39	C. ஸ்டெல்லாஹெப்சிபா	
40	V. மாரியம்மாள்	
43	A. சொர்ணபாய்	
44	ஆ கிரேஸ்	
45	அ. இரமணி	
48	V. லில்லிபாய்	
49	ம. மாரிய செல்வம்	
54	W. விரோணிக்கம்	
55	தே. மார்க்கிரேட்மேரி	
24	A. பாக்கியம்	மே/பா. K. R. சுவாமி முதல்வா செந்தமிழ்க் கல்வி நிலையம், ஆற்றூர் P. O. குமரி மாவட்டம்
26	S. சுலோசனபாய்	
28	C. டெய்ஸிபெபல்ரோஸ்	
29	N. லட்சுமி	
31	R. புஸ்பம்	
32	K. கோசலை	
34	P. ரூஸ் வெல்டுலிஜ்	
16	இரா. ப. சிதம்பரம்	B. துரிஞ்சிப்பட்டி (வழி) பொம்மிடி
23	சு. இராசேந்திரன்	1/39 திருவாடானை முகவை மாவட்டம்
59	வே கந்தையா பிள்ளை	சிக்கல், முதுகுளத்தூர் முகவை மாவட்டம்

100	ஈசுவரன்	செந்தமிழ்க் கல்லூரி மதுரை
102	சு. சிதம்பரம்	
103	பழநிசிங்காரவேலு	
104	அ. அ. பஃசீர்	
105	கஸ்தூரி	
106	பார்வதி	
107	வைரம்	
108	ஓச்சம்மாள் முத்துக்கனி	
109	பழநியம்மாள்	
110	சீதாலெட்சுமி	
111	ஞானம்பிகை	
112	புஸ்பம்	
114	மீனாட்சி	

புலவர் தேர்வு

முதல் வகுப்பு:

63.	சி. இராஜகோபாலன்	வேவலூர் P. O. மணப்பாறை.
76.	மு. சுந்தரேசன்	S. B. S. S. தமிழ்க் கல்லூரி, மயிலம்
84.	R. முருகேசன்	

இரண்டாவது வகுப்பு;

6 .	ந. இராமமூர்த்தி	ஆதனூர் P. O. உளுந்தூர்பேட்டை (வழி) தெ. ஆ. மாவட்டம்
69.	கெ. கி. குப்புசாமி	S. B. S. S. தமிழ்க்கல்லூரி மயிலம்
70.	இ. நாராயணசாமி	
71.	க. தட்சிணாமூர்த்தி	
73.	செ. சிவசுப்பிரமணியன்	
78.	வ. கண்ணப்பன்	
79.	K. செந்தாமரைக் கண்ணன்	
83.	P. முருகேசன்	
89.	சு. சடாட்சரம்	

115. ம. ரா. கோமதிநாயகம்
116. ம. முத்துசாமி
117. பெ. இராசகோபால்
} செந்தமிழ்க் கல்லூரி மதுரை

மூன்ருவது வகுப்பு:

62. கோ. இராமர்பாண்டியன் — தலைவன்கோட்டை (வழி) சங்கரன் கோவில்

72. துரை. சு. நாராயண மூர்த்தி
74. சி. கனகசபாபதி
75. ந. கிருட்டினசாமி
77. சீ. இராமச்சந்திரன்
80. கொ. இராமச்சந்திரன்
81. க. அ. கிருஷ்ணன்
82. கு. முனியன்
85. பொ. சண்முகசுந்தரம்
86. A. மேரிராசகுமாரி
88. ஜே. சாந்தாபாய்
} S. B. S. S. தமிழ்க்கல்லூரி மயிலம

118. K. K. குமாரசாமி
419. இ. ப. நடராசன்
} செந்தமிழ்க்கல்லூரி மதுரை

தமிழ்ச்சங்கம் } மதுரை — செயலாளர் 20—6—60

உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று
வெளிவரும் திங்களிதழ்.

ஐம்பத்தைந்தாம் தொகுதி
Volume 55

விகாரியாண்டு
1959—1960

மதுரைத் தமிழ்ச்சங்கம்

மதுரை.

உள்ளுறை

விகாரி **1959—60**, தொகுதி ருரு, பகுதி க-கஉ

பக்கம்

1. அகத்திணைத் தெளிவு 221, 253, 294, 336, 360
   வித்துவான். வீ. ப. கா. சுந்தரம் எம். ஏ.

2. அந்தாதியிலக்கியம் 9, 29, 69
   பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர்

3. அலைமகள் 332
   பதிகன்

4. அவதானச் செல்வர் 212
   வித்துவான். பாப்பு. இராமநாதன்

5. அன்பர் அஞ்சல் 152

6. ஆசிரியர் குறிப்பு 153

7. ஆய் அண்டிரன் 265
   ச. அகத்தியலிங்கம் எம். ஏ., பி. எஸ்ஸி.

8. இலக்கணம் வேண்டாமா? 165
   மா. இளையபெருமாள். எம். ஏ, எம். லிட்

9. இரங்கற் செய்திகள் 283, 314

10. இருவேறுலகத்தியற்கை 305, 317, 367
   புலவர். வெ. சி. சீனிவாசன்

11. இளம்பூரணர் எழுத்துரை 369
   வித்துவான். ஆ. சிவலிங்கனார்

12. உலகச் சமயங்கள் 17, 53, 77, 185, 206, 239, 212, 374
   கி. பழநியப்பன்

13. எது திறனாய்வு? 370
   ச. அகத்தியலிங்கம் எம். ஏ. பி. எஸ். ஸி.

14. ஐம்பத்து நான்காந் தொகுதியின் உள்ளுறை 26

15. ஒளிநெறியாண்டு 342
பண்டித. மு. இராமலிங்கம் பி. ஏ.

16. கடவுள் வாழ்த்து 239
கி. பழநியப்பன்

17. கலை கலைக்காகவே 35
நா பாலுசாமி எம். ஏ.

18. காலமும் கவிஞனும் 132
ச. அகத்தியலிங்கம் எம். ஏ., பி. எஸ். ஸி.

19. கானல்வரி பாடிய காலம் 274
வித்துவான். ஆ சிவலிங்கனார்

20. டாக்டர். கிராலின் தமிழ்வினைப் பாகுபாடு 355
மா. இளையபெருமாள் எம். ஏ., எம். லிட்.

21. சங்கச் செய்திகள் 57, 92, 117, 156, 314, 380

22. சங்க நூற் சிறப்பு 231
மது. ச. விமலானந்தம் எம். ஏ.

23. சரமகவி மாலிகை 346
மின்னாநூருத்தீன்

24. சனி நீராடு 329
புலவர். இரா. இளங்குமரன்

25. சிலப்பதிகார வாழ்த்துப்பாடல் 189
வித்துவான். நா. இராமய்யாபிள்ளை எம். ஏ.

26. சிலம்பின் சிறப்பு 112, 125, 157
மது. ச. விமலானந்தம் எம். ஏ.

27. செந்தமிழன்பரே சேரீர் 1
பண்டித. அ. முத்துசாமிப்புலவர்

28. செழுந்தமிழ் 52
அமுதசீலன்

29. தண்டனை 302, 323
வித்துவான். மு. உலகநாதன்

30. தமிழொளி 193
பண்டித. மு. இராமலிங்கம் பி. ஏ.

31. தருநடு திருவிழா 3
சா. ஆபிரகாம் எம். ஏ., எல். டி.

32. திறனாய்வு தேவையா? 177
ச. அகத்தியலிங்கம்

33. தைப்பொங்கல் 285
ச. அகத்தியலிங்கம்

34. தொல்காப்பியத்திற் சில வழக்காறுகள் 216, 245
வித்துவான். கு. மா. திருநாவுக்கரசு

35. நற்றிணை அரசப்புலவர்கள் 48, 169
வித்துவான். நா. இராமய்யாபிள்ளை எம். ஏ

36. நாடகத் தமிழ்ச்சொற்கள் 85, 108, 145
சங்கீதவித்துவான். ப. சுந்தரேசன்

37. நாவலர். சா. சே. பாரதியார் வாழ்க்கை வரலாறு 93

38. நும்—நீயிர் 309, 333
வித்துவான். ஆ. சிவலிங்கனார்

39. நெடுங்கிள்ளி 25, 37
புலவர், வித்துவான். மு. உலகநாதன்

40. பதிகம் இளங்கோ யாத்ததா? 195
ச. ஔவையார்

41. மதிப்புரை 124, 281

42. மூவகை மொழி 172
வித்துவான். ஆ. சிவலிங்கனார்

43. வடசொல்லின்றித் தமிழ் வாழாதா? 61, 104
அ. கி. பரந்தாமனார் எம். ஏ

44. வடலூர் வழி 145
பண்டித. மு. இராமலிங்கம் பி. ஏ.

45. வாழ்வியல் நுட்பங்கள் 14, 43
வித்துவான். கு. மா. திருநாவுக்கரசு

64. வேற்றுமையா வினையெச்சமா? 37
மா. இளையபெருமாள் எம். ஏ., எம். லிட்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜனி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1. 2. 3. 6. 7. 8. 9. 10. 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.